# கலாதீபம்

කලාදීබම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.04.2023 – 30.04.2023 | தீபம் 11


## இன்றைய கல்விமுறை திறமைசாலிகளை இனங்காணத் தவறிவிட்டது

**கவிஞர் சோ.ப. சிறப்புரை**



மின்குமிழை கண்டுபிடித்த எடிசன் பாடசாலை ஆசிரியர்களால் கைவிடப்பட்ட ஒருவர் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் நிலைமையும் அதுவே. குவிசிந்தனை, விரிசிந்தனை குறித்து எத்தனைபேர் கவனம் செலுத்துகின்றனர் என தனது கருத்துக்களைத் தெரிவித்தார் பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னைநாள் அதிபரும் கவிஞருமாகிய திரு சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன். கடந்த 26.05.2023 அன்று அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற ஒன்றுகூடலில் (அசெம்பிளி) நிகழ்வில் அதிதி பேச்சாளராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றும் போது அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்தார். ➡ 10

## கலாசாலை நாடகவிரிவுரையாளரின் "கூடி வாழ்வோம்" நாடக நூல் வெளியீடு சிறப்புற இடம்பெற்றது



கலாசாலை விரிவுரையாளர் திருமதி சந்திரிகா தர்மரட்ணம் எழுதிய **கூடி வாழ்வோம்** என்ற நாடக நூலின் வெளியீட்டு விழா 03.04.2023 பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

அதிபர் திரு ச.லலீசன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் திரு வீ.கருணலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினராக திரு கை.திலகநாதன் (விரிவுரையாளர் யா.தே.க.க) அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

➡ 10

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகக்கழகம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்
தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்
திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**இணை ஆசிரியர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**
தங்கன் இன்பதாஸ்
ஆசிரியமாணவன் - உடற்கல்வி (2021/2022)

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.


**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## வருடம் தோறும் கலாசாலையில் நடைபெறும் சித்திரை புத்தாண்டு விழாவும் கை விசேஷம் வழங்கும் நிகழ்வும்



கலாசாலையில் 15.4.2023 அன்று காலை யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாட்டுடன் ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து அனைவருக்கும் கை விசேஷம் வழங்கும் நிகழும் இடம்பெற்றது.

## கற்பித்தல் பயிற்சி



எதிர்வரும் 08.05.2023 முதல் 26.05.2023 வரை மூன்று வாரங்களுக்கு இடம் பெறவுள்ளது. முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கு ஒருங்கே இச் செயற்பாடு நடைபெறவுள்ளது. இம்முறை ஆசிரியமாணவர் ஒருவரை விரிவுரையாளர் இருவர் மதிப்பீடு செய்யவுள்ளதாக அதிபர் தெரிவித்தார். பெரும்பாலான ஆசிரிய மாணவர்கள் யாழ் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தமது பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

# கலாதீபம்

කලාදීපම KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කළා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයකි.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

**உரிய காலங்களில் பரீட்சை நடத்துதல்**

கற்கை நெறியை தொடர்பவர்கள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ள பரீட்சை மிகவும் அவசியமானது. பரீட்சைகள் உரிய காலத்தில் நடாத்தப்படுதல் அதைவிட அவசியமானதாகும்.

ஆசிரிய கலாசாலை பரீட்சைகளைப் பொறுத்த வரையில் கடந்த சில வருடங்களாக உரிய காலத்தில் பரீட்சைகள் நடத்தப்படுவதில்லை என்ற குறையினை அவதானிக்க முடிகிறது. கடந்த டிசம்பர் மாத நடுப்பகுதியில் கற்கைநெறியை பூர்த்தி செய்த 2021/2022 கல்வி ஆண்டுக்குரிய பரீட்சைத் திகதி இந்த ஆண்டின் நான்கு மாதங்கள் கடந்த நிலையில் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. எந்த ஒரு செயற்பாட்டிலும் திட்டமிடல் என்பது மிகவும் அவசியமானது.

கற்கைநெறியின் ஆரம்ப திகதி அன்றே அதன் முடிவு திகதி யாவராலும் உணரப்படக் கூடிய-தாக இருக்கின்றது. ஆரம்ப திகதியிலிருந்து சரியாக இரண்டு வருட காலத்தில் முடிவுத் திகதி அமைந்திருக்கின்றது. எனவே இவ் விடயத்தில் துறைசார்ந்த அதிகாரிகள் கூடிய சிரத்தையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். பரீட்சை முற்கூட்டியே அறிவிப்பதன் ஊடாக தமது சொந்த விடயங்கள் குறித்தும் பரீட்சாத்திகள் திட்டமிட முடியும். இலங்கையில் ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரிய கலாசாலைகள் குறித்தான கவனம் மேலும் வலுப்பெற வேண்டும். இதன் ஊடாகவே வல்லமை மிக்க ஆசிரியர்களை உருவாக்கி நாட்டிற்கு வழங்க முடியும்.

## கலைமலர் நூற்றாண்டு மலருக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன

கலாசாலையின் நூற்றாண்டு விழாக்காலத்தினை சிறப்பிக்கும் வகையில் கலைமலர் சஞ்சிகை நூற்றாண்டு மலராக வெளிவர உள்ளது. இதற்கான ஆக்கங்களை மலர்க்குழு கல்விசார் சமூகத்திடமிருந்து எதிர்பார்க்கிறது.

கலைமலருக்கான ஆக்கங்கள் அமைய எதிர்பார்க்கும் விடயப்பரப்புக்கள் பின்வருமாறு

1) யோகமண்டபமும் யோகலிங்கஸ்வாமி கோயில் உருவாக்கமும்
2) கலாசாலைசார் / வளர்த்த படைப்பிலக்கிய கர்த்தாக்கள் (கவிதை, சிறுகதை....)
3) கலாசாலை வளர்த்த கலைஞர்கள் (வீரமணிஐயா, காரை செ.சுந்தரம்பிள்ளை, குறமகள் ....)
4) தமிழர் கல்விமரபில் கோப்பாய் ஆசியகலாசாலை
5) மூன்றாம் நிலைக்கல்வி வழங்கும் நிறுவனங்கள்
6) ஆசிரிய கலாசாலைக் கலைத்திட்டம்
7) கலாசாலை தந்த உயர் ஆளுமைகள்
8) 21ஆம் நூற்றாண்டுக் கல்வி
9) கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கற்கை நெறிகள்
10) கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தடம் பதித்த பெண் ஆளுமைகள்
11) ஆசிரிய கல்வியும் ஏனைய வளர்ந்தோர் கல்விமுறைமைகளும்
12) நவீன கல்விப் போக்குகள்

......இப்புலம் சார் இதர பிறதுறை விடயங்கள்

மேலதிக விபரங்களுக்கு கலைமலர் குழுவினருடன் தொடர்புகொள்ளவும்.

**தொடர்பு**

திரு கு.பாலசண்முகன் - 0776215500

திரு சி.மனோகரன் - 0770761177

## News in Brief
## Month of April

**03.04.2023**

" Koody Valzvom" - a drama book which was written by the drama lecturer Mrs.Chandrika Tharmaratnam was launched by our college principal Mr S Laleesan on 3rd April 2023 in our college Rathiluxmi Hall.

**04.04.2023**

The First term vacation for the Teachers' college was on 4th April 2023. It has been reopened for the 2nd term academic activities on 24th April 2023. The teacher trainees will face their teaching practicum on 08.05.2023.

**15.04.2023**

The Tamil - Sinhala New year was celebrated at Yoha lingeshwar temple. pooja was held grandly this year too. In the auspicious time "The kai vishesham" (money exchange event) was held.

**26.04.2023**

World Book Day celebration was held on 26.04.2023 Wednesday morning assembly Our principal Mr.S. Laleesan headed this event. Tamil course Teacher trainee Mr. T.Suresh compared the events smoothly.

Mrs.Vasanthamalar, maths trainee delivered the speech on behalf of the teacher trainees. Our senior lecturer Mr S.Manokaran delivered a worth full talk on behalf of the lecturers. The Importance of reading and the value of the day were emphasized.

The retried principal of Palaly Teachers' college and also the leading senior poet called as (So. Pa.) Mr.Somasundrampillai. Pathmanathan is the keynote speaker of the event. A fruitful speech was delivered by him. Our lecturer Mr. Vel.Nandakumar introduced poet So. Pa. through his poem. The poet was honored by the college society.

Finally the tea party was arranged by the Islamic tea party was arranged by the Islamic students for their celebration of Ramazan.

## My Childhood Friend

**I used to have a friend,**
**He's green, black and silver.**
**Any places in Kinniya,**
**we hadn't been together?**

**All the destinations, he carried me**
**But always out, in stand for waiting me.**
**We're faster, more active**
**And never minded the time.**

**Once a week, with something which smell like Arabian fragrances, I'd given him wash.**
**Twice a week, in Ameer uncle's shop**
**I used to ask him to breathe in.**

**For him there's a place to take rest**
**When he's alone or tired at home.**
**But outside, he always enjoyed under huge shady trees .**

**At the Lightless nights, for me**
**He spread his own to study.**
**When I needed music, for me**
**He played his own to listen.**

**We had, on Sundays, a bad habit**
**Which visiting beach together.**
**One Sunday morning around 8.45 a.m.**
**It's 24th December 2004.**
**The sea wanted to see us.**
**So visited as sweet Tsunami.**

**Both hurried to escape from Tsunami's chase**
**With some groups of people like sprinters.**
**While running towards the fifth floor,**
**Both fell down, only I was rescued, unfortunately.**

**I had no idea about him,**
**the next day, My father brought him with broken legs, face and hands. Since then,**
**He's still been in our store room,**
**Looking and smiling at me**
**Whenever I cross the room with his broken teeth.**

**Humam Samsudeen**
**English Course**
**1st year (2022/2023)**

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி.சந்திரிக்கா தர்மரட்ணம் அவர்களின் கூடி வாழ்வோம் நாடக நூல் வெளியீட்டில் ஜோன்சன் ராஜ்குமார் அவர்கள் ஆற்றிய நயப்புரை

பெருமைமிக்க கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக இருக்கின்ற திருமதி.சந்திரிக்கா தர்மரட்ணம் அவர்களின் கூடி வாழ்வோம் என்ற நாடகநூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சி. என்னை இங்கு அழைத்து நயப்புரை நல்க வழங்கப்பட்ட சந்தர்ப்பத்துக்காக நெஞ்சார்ந்த நன்றி. கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூறாவது ஆண்டிலே ஒரு சிறப்புமிகு வெளியீடாக இது அமைந்துள்ளது.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பல நாடகங்களை உருவாக்கிய வரலாறு கொண்ட ஒரு கலாசாலை. இங்கே உருவான பலர் பல்வேறு இடங்களிலும் சிறந்த நாடக ஆசிரியர்களாக விளங்குகின்றனர். நாடகங்கள் நூல் வடிவத்திலே வெளியிடப்படுகின்ற போது அவை ஒரு இலக்கிய வடிவத்தைப் பெறுகின்றன. நாடகம் ஒரு ஆற்றுகை கலையாக இருக்கும்போது நிகழ்த்தப்படும் காலத்திலேயே இது இறந்து போகிறது. அது புத்தகமாக அச்சுவடிவம் பெறும்போதே நீண்டகாலம் வாழ்கிறது. படிக்கப்படுகிறது. ஒரு இலக்கியமாக பரிணமிக்கிறது. அவ்வகையில் சந்திரிக்கா தர்மரட்ணம் அவர்களின் கூடிவாழ்வோம் என்ற இந்நாடக நூல் நாடக இலக்கியப் பிரதியாகிறது.

நாடகம் என்பது சமூகத்தை ஏன் நிலைக்கின்ற முக்கியமான ஒரு கலை வடிவம் நாடக வடிவம் மனிதர்களின் உணர்வுகளோடு உரையாடுவதனால் அது சமூகத்திலே மிகவும் முக்கியமான ஒரு இடத்தைப் பெறுகின்றது. கல்வியோடும் நாடக்கலை தொடர்புபடுகிறது. ஆசிரியர்கள் தமது கற்பித்தல் நுட்பங்களில் ஒன்றாக நாடகக்கலையை கையாள்கின்றனர். எனவே ஆசிரிய கலாசாலையில் பயிலும் இந்த ஆசிரிய மாணவர்கள் இந்நாடகப்பிரதியை பெறுகின்ற போது அவர்கள் தங்கள் மாணவர்களுக்கு இதனை பிரயோகிக்கின்றபோது நீட்சியை கொண்டதாக இது மாறும் நாடகம் என்ற கலைவடிவம் இரண்டு பரிமாணங்களைக் கொண்டது. ஒன்று ஆற்றுகைப் பரிமாணம் மற்றது. இலக்கியப் பரிமாணம் ஆற்றுகைப் பரிமாணம் என்பது பார்போர் முன்னிலையில் நடிகர்களால் நிகழ்த்தப்படுவது. அது நிகழ்த்தப்படும் கணங்களில் சமூக மனங்களில் தாக்கம் செலுத்தும். ஈழத்தில் 80களுக்கு பின்னர் ஆற்றுகை வடிவம்தான் முதன்மை பெற்றது.

இதனால் அதன் இலக்கியப் பரிமாணம் கவனிப்பாரற்று விடப்பட்டது. இலக்கியப் பரிமாணம் என்பது நாடகம் வாசிப்பதற்குரிய ஒன்று என்று வலியுத்துகிறது. சிறுகதை, நாவல், கவிதை போல.. குறிப்பாக மேற்குலகிலே அது இன்றும் வாசிப்பதற்குரிய ஒரு சிறந்த கலை வடிவமாகக் கொள்ளப்படுகிறது. அதனால் தான் சேக்ஸ்பியர் உலகமகாகவியாக போற்றப்படுகிறார். உலகின் மிகச்சிறந்த இலக்கியப் படைப்பாளிகள் பலர் சிறந்த நாடக எழுத்தாளர்களாகவும் இருந்திருக்கின்றார்கள். ஈழத்தமிழரைப் பொறுத்தவரை நாடகத்தின் இலக்கியப் பரிமாணம் ஒரு காலத்தோடு கைவிடப்பட்டுவிட்டது. தென்னிலங்கையில் கூட சிங்களவராகிய நாடகம் ஒரு இலக்கியமாக போற்றப்படுகிறது. மனமே, சிங்கபாகு போன்ற நாடகங்களாக சிங்கள மாணவர்கள் வாசித்துப் பேசுகிறார்கள்.

போராட்ட காலத்திலே நாடகம் செயற்பட்ட அளவிற்கு ஏனைய கலைகள் பெறப்பட்டிருக்குமென தெரியவில்லை. பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களது போராட்ட கால துயரங்களை சித்தரித்த வகையிலே நாடகத்துக்கு முக்கிய பங்குண்டு எனக் குறிப்பிடுகிறான்.

அது ஒரு நிகழ்நிலைக் கலையாக இருந்தாலும் இலக்கிய வடிவம் பெறுகின்ற போது தான் காலம் கடந்தும் வாழும் தன்மையை பெறுகிறது. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துருக்கள் கூட சிறந்த இலக்கியத் தரம் மிக்கவை எனக் கூற முடியாது என பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுகிறார். மேடையில் நாடகத்தை பார்க்கின்ற உண்மை நாடக பிரதியை வாசிக்கும் போதும் பெறுமுகமாக இருந்தால் அதுவே இலக்கிய ரீதியாக நாடகத்தை எழுதுவதாகிறது.

மேடையில் நாங்கள் நாடகத்தை பார்க்கின்ற அனுபவத்தை அதனை வாசிக்கும்போது பெற்றுகப் கொள்வதே அதன் இரட்டை பரிமாணம் ஆகும். சேக்ஸ்பியரின் நாடகத்தில் இவ்வனுபவத்தை நாம் பெற முடியும். எனவே தான் இலக்கிய பரிமாணத்தை கொண்ட நாடக வளர்ச்சிகள் எம்மிடம் போதாமையாக உள்ளது. ஆனால் எங்களது ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர்களாய் இருந்த பலர் அதிபர்களாய் இருந்த பலர் சிறந்த இலக்கிய வாதிகளாகவும் இருந்திருக்கிறார்கள். சம நேரத்தில் சிறந்த நாடககாரராகவும் இருந்திருக்கிறார்கள் எடுத்துக் காட்டாக பண்டாரவன்னியன் நாடகம் உட்பட பல சிறுகதை, நாவல் தொகுதிகளைத் தந்த முல்லைமணி, நாடறிந்த கவிஞர் இசைநாடக கூத்துக் கலைஞர் காரைசுந்தரம் பிள்ளை, சொக்கன் அவர்கள் ஈழத்து நாடக வரலாற்றை ஆய்வு செய்து எழுதியவர் பல நாடகங்களையும் எழுதியுள்ளார். எனவே ஒரு காலகட்டத்தில் இருந்த பல இலக்கியவாதிகள் சிறந்த நாடககர்களாகவும் இருந்திருப்பதைக் காணமுடிகிறது. இந்த நிலை கடந்த சில சகாப்பதங்களாக விடுபட்டு விட்டது. நாங்கள் இன்று அரங்குகளுக்காக மட்டும்தான் நாடகங்களை எழுதுகின்றோம். கூடி வாழ்வோம் என்ற இந்தத் தொகுதி கூட அரங்குகளுக்காக எழுதப்பட்ட நாடகங்களையே கொண்டுள்ளன. இலக்கிய பரிமாணத்துடன் எழுதப்பட்டவை அல்ல.

எனவே இந்த இரண்டு பரிமாணங்களோடும் நாடகம் நகரும் போதுதான் நாடக இலக்கியப் பாரம்பரியம் வளர்ச்சி பெறமுடியும். எனவே பல்லாயிரங்கணக்கானவர்களை உருவாக்கி நூற்றாண்டு கண்டுள்ள இவ் ஆசிரிய கலாசாலை பல இலக்கியவாதிகளை நாடகர்களை உருவாக்கிய சிறப்புக்குரியது. இக் கலாசாலையின் கிருஸ்ண படிப்பகம் என்ற நூலகம் கூட ஒரு நாடகத்தை போட்டு அதன் நிதியில் கட்டப்பட்டது என்ற சிறப்புக்குரியது. நாடக கலை மேம்பாட்டுக்காக பல செயற்பாடுகள் இக்கலாசாலையில் நடந்துள்ளன. இசை நாடக கூத்துக் கலைஞராய் காரை சுந்தரம் பிள்ளை நான் சிறுவனாய் இருந்த போது இக்கலாசாலையில் கூத்து, இசை நாடகங்களை பழக்கி மேடையேற்றியுள்ளார். நானும் அதில் சிறுவனாய் சில நுணுக்கங்களை பயின்றிருக்கிறேன். மிக அண்மைக் காலத்தில் ஓய்வு பெற்ற அதிபர் திரு.வீ.கருணலிங்கம் அவர்கள் கூத்து, இசை நாடகங்களை ஆசிரிய மாணவர்களுக்கு பழக்கி அரும்பணிகள் செய்துள்ளார். அதே போன்ற இன்றைய விழா நாயகி திருமதி.சந்திரிக்கா தர்மரட்ணம் அவர்களது பங்களிப்புகளும் சிறப்பானவை என்று கூறி இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய கலாசாலை அதிபர் உள்ளிட்ட சமூகத்துக்கு மீண்டும் நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.



## உலக புத்தகதின நிகழ்வில் கலந்து கொண்ட கவிஞரும் பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபருமான சோ.பத்மநாதன் அவர்கள் ஆற்றிய உரை

உலக புத்தக தினம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 26.04.2023 புதன்கிழமை கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுக்கு சிறப்பு அதிதியாக வருகை தந்த ஈழத்தின் மூத்த கவிஞரும் பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபருமான சோ.ப என இலக்கிய உலகில் அழைக்கப்படும் சோ.பத்மநாதன் அவர்கள் அதிதி உரை ஆற்றினார்.

சிந்தனைக்களம் என்ற தலைப்பில் அவரது உரை இடம்பெற்றது. அனைவருக்கும் வணக்கம் சொல்லி அவர் தமது உரையை ஆரம்பித்தார். பல மகான்களின் நினைவைக் கொண்டாடும் இந்நாளில் கல்வித்துறை சார்ந்தவர்களாக நீங்கள் இருப்பதால் எமது நாட்டின் கல்வி முறை பற்றிய சில சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக தன்னுரை அமையும் எனக் குறிப்பிட்டார். அவர் எங்களுடைய கல்வித் திறமைசாலி-களை இனங்காண தவறிவிட்டது வெறுமனே பரீட்சைப் புள்ளிகளே அறிவாளிகளைத் தீர்மானிக்கும் நிலையே உள்ளது எனக் குறிப்பிட்டதுடன் கல்வி வேறு அறிவு வேறு. சிலர் கருவிலேயே திருவுடையவர்களாக இருக்கின்றனர். சிந்தனையை இரண்டாக வகுக்கலாம் என குறிப்பிட்ட அவர் அதனை குவிசிந்தனை, விரி சிந்தனை என இரண்டாக வகுத்து உளச்சார்புப் பரீட்சை அமைப்பை எடுத்துக்கூறி சில கணித நுண்ணறிவுகளை எடுத்துக்கூறி அதனை விளக்கியதுடன் மிக எளிமையாக கமராகு கதைகள் என்ற ஒரு நாட்டுப்புற கதை மூலம் ஒரே உரல் பல தேவைகளுக்கு பயன்படுவதை விரிசிந்தனைக்குரிய உதாரணமாக எடுத்துக் காட்டினார். பின்னர் சேக்ஸ்பியர் காலத்தில் வாழ்ந்த யோன் கீஸ்ட் என்பவருடைய கவிதையை எடுத்துக்காட்டி அதில் அவர் திசையறிகருவி பற்றிய கணித சிந்தனை ஒன்றை வாழ்வியலோடு இணைத்துக் கூறியுள்ள தற்புதுமைச் சிந்தனையை எடுத்துக் தருமனிடம் யக்ஷன் கேட்ட கேள்விக்கு மரணம் அடைபவர்களைக் கண்டும் மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதுதான் என பாண்டவர் தண்ணீர் குடிக்கச் சென்று மரணித்த கதை எடுத்துக் காட்டிப் பேசியதுடன் அதில் நகுலனை எழுப்பித் தருமாறு கேட்ட தருமனின் தரும சிந்தனையையும் எடுத்துக் கூறியுள்ளார். அடுத்து எமது பாடசாலைக் கல்வி குறிப்பாக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவரை பாராட்டும் முறைகளில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டியதுடன் பாடசாலை செல்லாமலே அறிவில் உயர்ந்த சிலரின் வாழ்வியல் சம்பவங்களை எடுத்துக் காட்டிப் பேசினார்.

அவ்வகையில் மின்சாரத்தைக் கண்டுபிடித்த கருவிலே திருவுடைய மேதாவியான தோமஸ் அல்வா எடிசனை எப்படி இந்தப் பாடசாலைக் கல்விமுறை தூக்கிவீசியது என்பதையும் அடுத்து சுவிஸ் நாட்டு கல்வி நிறுவனம் ஒன்றால் இவருக்கு கணித அறிவு போதாது என்று நிராகரிக்கப்பட்ட ஐன்ஸ்டீன் பிற்காலத்தில் எப்படி உலகம் போற்றும் கணித மேதையாக வந்தார் என்பதை அவரது வாழ்வில் நடந்த பல சம்பவங்கள் வழியாகவும் எடுத்துக்கூறியதுடன் கீழைத்தேசத்தில் தான் கண்டு வியந்த இருவர் என்ற வகையில் பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளின் உளவியல் பாட விரிவுரைய-ாளராக இருந்த கலாநிதி சிவப்பிரகாசம் இலங்கையின் முதலாவது உளவியல் கலாநிதியாகவும் விளங்கிய இவரது பல்வேறுபட்ட சிறப்புக்களை இவரிடம் கற்ற ஒரு மாணவனாய் எடுத்துரைத்ததுடன் நிறைவாக அப்துல்கலாம் அவர்களுக்கு கற்பித்த சிவசுப்பிரமணியம் மாஸ்டர் வழி மலர்ந்த மதம் கடந்த அறிவு மேதாவித்தனத்தை அவரது சிறப்புக்களை எடுத்துக் கூறி அழைத்துக் கௌரவித்த கலாசாலைச் சமூகத்திற்கு நன்றி கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

## சோ.ப. தரிசனம்

ஆக்கம்: வேல் நந்தகுமார், விரிவுரையாளர்(SLTES)

எங்கள் கவி வானின்
முழு நிலவை
நூற்றாண்டு காணும்
கலாசாலை முற்றத்தில்
வரவேற்கும் வேளையிது

உலக புத்தகதின விழா இதில்
எங்கள் மண்ணின் வாழும்
மூத்த கவிப்புத்தகமாம்
சோ.ப எனும் நாமம் கொண்டு
கவிப்பரவுலகம் கொண்டாடும்
கலாசாலைக்காரரை அறிமுகம்
செய்யும் வேளை இது
சோமசுந்தரம்பிள்ளை
பத்மநாதன் அவர் முழுப்பெயர்

முத்தொன்பதில் பிறந்து
எண்பதும் கடந்து வாழும்
கவிமுதுசம் இவர் கொக்குவில்
பொற்பதி தந்த நற்கவி

ஆங்கிலமும் தமிழும் கலந்த
பன்மொழிப்புலமை இவர் பலம்
பேராதனையின் கலைப்
பட்டதாரியாய் லண்டனில்
ஆங்கில உயர் கல்வி
பெற்றவராய்

ஆங்கில ஆசிரியராகிப் பின்
பலாலி ஆசிரிய
கலாசாலையில் ஆங்கில
விரிவுரையாளராய்

அங்கேயே அதிபராய் என ஒரு
பயணம் எங்கள் அதிபரும்,
பிரதி அதிபர்
கோபாலகிருஸ்ணனும் உப
அதிபர் சத்தியா ரஞ்சித்தும்
ஆங்கில விரிவுரையாளர்
வசந்தியும் அங்கவர்
மாணாக்கர்கள்

கவியரங்கம், பட்டிமன்றம் என
பலவற்றின் களம் தந்த நடு-
வராய் இவர் அங்கு
மறுமுனையில் கவிஞராய்
கட்டுரையானாராய் மொழி
பெயர்ப்பாளராய் பாடலாசிரிய
ராய் என இவர்தம்

இலக்கியப் பயணம்......

வடக்கிருத்தல் வடக்கிருத்தல்
நினைவுச் சுவடுகள்
சுவட்டெச்சம் இவர்
தமிழ்க்கவி உலகின்
அறுவடைகள்

மொழிபெயர்ப்புக் கவிஞராய்
இவர் செய்த பணிகள் மொழி
கடந்தும் இவர் பெருமை
சொல்லும் ஆபிரிக்க
தென்னிலங்கை தென்னாசியக்
கவிதைகளின் மொழி
பெயர்ப்புடனே அண்மையில்
தெலுங்கு மலையாள
மொழிபெயர்ப்பும் நாடக
மொழிபெயர்ப்பும் என்று இவர்
புலமை சிறப்பைப் புரிய
வைக்கும்

கூடவே பர்மியப் பிக்குகள்
சொன்ன கதைகளும் நோக்கு
எனும் ஆய்வுக் கட்டுரைத்

அண்மையில் தெலுங்கு மலை
யாள மொழிபெயர்ப்பும் ஊடாக
மொழிபெயர்ப்பும் என்று

இவர் புலமை சிறப்பைப் புரிய
வைக்கும் கூடவே பர்மியப்
பிக்குகள் சொன்ன கதைகளும்

நோக்கு எனும் ஆய்வுக்
கட்டுரைத் தொகுதியிலும்

நல்லூர் முருகன் காவடிச்
சிந்தும் முத்துச் சிரிப்பும்
மாவட்ட கீதமும் இவர்

பாடற் சிறப்பின் பாங்கு
சொல்லும் யாழ் பல்கலை
வருகை விரிவுரையாளப்
பணியுடனே

உலகக் கவிதை மாநாடுகள்
உயர் இலக்கிய விருதுகள்
சைவ வித்தியா விருத்திச்
சங்கப் பணிகள்

இவர் கவியரங்கக்
கவிதைகளுக்கு நாம்
அடிமை இந்த வயதிலும் எப்படி
முடிகிறது இவரால்

எண்ணி வியக்கிறோம் கவி
வாரிசுகள் பலரை உருவாக்கிய
யாப்பு ஆசானே என் கவி
வழிகாட்டியே

சேக்ஸ்பியரின் பிறந்தநாளில்
கொண்டாடும் உலக புத்தக
நாளில் எமது மண்ணில்

வாழும் சேக்ஸ்பியரை வாழ்த்தி
அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி
கொண்டு

வாழ்க பல்லாண்டு

வாழ்க தமிழ்

# Importance of Drama and Theatre in Education

**Mrs Emalda Usha Thushiyanthan**
**English Course 2nd Year.(2021/2022)**

Drama is the specific mode of fiction represented in performance in front of the audience on the stage. The term of drama was derived from Greek Language. It means 'To do' or 'To act'. Drama will be incomplete without dialogue and performance. Other than these two elements , There will be plot, setting, characters, conflict, theme, scenery and climax etc.

There are 3 types of dramas in English literature. Tragedy , comedy and tragic comedy. Tragedy drama means a play which ends with a death. Comedy means a play doesn't end with death, it has a happy or humorous ending at the end. Tragic comedy means a play in which serious and comic elements are mixed.

William Shakespeare is known as 'Father of English literature'. Because of his massive contribution for play writing. World theatre day was initiated in 1961 by the International Theatre Institution. It is celebrated annually on 27th of March.

Various national and international theatre events are organized to mark this occasion. World theatre day is aimed for promoting all forms of theatre all around the world and making people aware of its value. forms of theatre all around the world and making people aware of its value.

Drama in education has been there since the time Plato started his academy. Drama is an 'effective learning tool' as well as 'emotional learning medium'. It involves the students intellectually, physically, socially and emotionally.

Activities in improvisation, pantomime, play making and scene enactment serve to develop the critical thinking. It leads to stimulate the creativity among the students successfully.

Spoon feeding a chunk of information and gulping it down without knowing the reason can be disastrous for our society. Likewise informing the students just about the information is not enough.

To stimulate the smart learning drama and theatre both are very crucial in education process. A good teacher has to induce the ability of creativity among students. Using the theatrical, musical as well as drama learning can be carried out in interesting and entertaining manner without any boredom. Drama enhances verbal and non-verbal expression of ideas. It improves voice projection, articulation, fluency of language, pronunciation and persuasive speech.

The common form of drama implemented in the process of imparting education is ' role play' . It involves a group of students in controlled atmosphere where they replicate a scene from a history or a play. This activity not only helps them to become thinkers and story tellers in future. But also it develops the confidence to engage in healthy relationship with others in the society. The use of drama and art in education leads to holistic learning, leadership qualities, empathy for others, accelerating the personal development, collaboration, communication,

problem solving skill and creativity. It can also enable students to generate the new ideas, knowledge and skills which are transferable or applicable to various new situation.

Participation in drama activities provide the teacher with another way to assess the students.

At the same time, drama provide another non-traditional opportunity for students to learn and demonstrate learning.

In conclusion, Drama and theatre are powerful medium. Both are very useful and essential for teaching learning process.

Thankyou.

……………………………………………………






**தொடர்ச்சி ……. 1ம் பக் சிறப்புரை…..**

இந்நிகழ்வில் மாணவர் உரையினை இரண்டாம் வருட கணித நெறியைச் சேர்ந்த திருமதி வசந்தமலர் அவர்களும் விரிவுரையாளர் உரையினை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு சி மனோகரன் அவர்களும் கவிஞர் சோ.ப அவர்களின் அறிமுக உரையினை கவிதை வடிவில் விரிவுரையாளர் வேல் நந்தகுமார் அவர்களும் வழங்கினர். இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட தமிழ் நெறி ஆசிரிய மாணவனான தி.சுரேஷ்குமார் தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதன் ஆற்றிய உரையின் தொகுப்பு ஏழாம் பக்கத்தில்

**தொடர்ச்சி……. 1ம் பக் நூல்வெளியீடு…..**

வரவேற்பு உரையினை திருமதி சத்தியா ரஞ்சித் உபஅதிபர் அவர்கள் நிகழ்த்தினார். நூல் வெளியீட்டுரையினை திரு அ.பௌஎநந்தி, விரிவுரையாளர், கல்விப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

நூல் வெளியீட்டின் முதல் பிரதியினை திரு வ.சி குணசீலன் ஓய்வுநிலை விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அவர்கள் பெற்றுக் கொண்டார். நூல் நயப்புரையினை திரு யோ.யோண்சன் ராஜ்குமார் நாடகத் துறை ஆசிரிய ஆலோசகர் யாழ் கல்வி வலயம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. அதனுடைய முழுமையான தொகுப்பு 5ஆம் பக்கத்தில் காணப்படுகிறது அவரைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையினை ஓய்வுநிலை அதிபர் திரு வீ.கருணலிங்கம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அவர்கள் நிகழ்த்தினார் அவரைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரையினை திரு தை திலகநாதன் விரிவுரையாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி அவர்களால் நிகழ்த்தப்பட்டது. கால மாற்றம் என்னும் நாடகம் காணொளி வடிவில் காட்சிப்படுத்தப்பட்டது. திருமதி சந்திரிகா தர்மரத்தினம் விரிவுரையாளர் அவர்களது நன்றி, ஏற்புரையுடன் இந்நிகழ்வு சிறப்புற நிறைவு எய்தியது.இந்நிகழ்ச்சியை திரு வேல் நந்தகுமாரன் விரிவுரையாளர் அவர்கள் தொகுத்து வழங்கினார்

# நிகழ்வுகளின் தொகுப்பு



கூடிவாழ்வோம் நாடகநூல் வெளியீடு — 03.04.2023



**சோபகிருது வருடப்பிறப்பு பெங்கலுடன் கலாசாலை சமூகம் — 15.04.2023**

கவிஞர் சோ.ப கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டபோது - 26..04.2023



